# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2015.08.25

**ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 09/2015**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்
வளாக அதிபதிகள்
நிறுவகப் பணிப்பாளர்கள்

**எழுதுவினைஞர் / களஞ்சியப் பொறுப்பாளர் / சரப்(சிறாப்பர்) / கணனிப் பயன்பாடுகள் உதவியாளர் பதவிகளில் II ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான எழுத்து மூலப் பரீட்சை**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 1994.01.26 ஆம் திகதிய 01/1994 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1982.07.02 ஆம் திகதிய 185 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மற்றும் 2013.12.20 ஆம் திகதிய 17/2013 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. எழுதுவினைஞர் / களஞ்சியப் பொறுப்பாளர் / சரப்(சிறாப்பர்) / கணனிப் பயன்பாடுகள் உதவியாளர் பதவிகளில் II ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான எழுத்து மூலப் பரீட்சையின் வினாத்தாள் II இற்கு "C" எனும் புதிய பகுதியைச் சேர்ப்பதற்கு 2015.05.21 ஆம் திகதி நடைபெற்ற ஆணைக்குழுவின் 917 ஆவது கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

3. குறிப்பிட்ட பதவிகளில் III ஆம் தரத்தில் சேவை உறுதி செய்யப்பட்டுள்ள மற்றும் ஆறு (06) வருட திருப்திகரமான சேவைக் காலத்தை நிறைவு செய்துள்ள ஊழியர்கள் இந்த எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பெறுகின்றார்கள்.

4. அதற்கமைய, எழுதுவினைஞர், களஞ்சியப் பொறுப்பாளர், சரப்(சிறாப்பர்) மற்றும் கணனிப் பயன்பாடுகள் உதவியாளர் பதவிகளில் II ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான எழுத்து மூலப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் கீழ் குறிப்பிடப்படும் வகையில் தயாரிக்கப்படும்.

**I ஆவது வினாத்தாள்:**

பல்கலைக்கழகங்கச் சட்டங்கள், அலுவலக முறைமைகள் உட்பட நிர்வாகம் மற்றும் ஒழுக்காற்று நடைமுறைகள், நடப்பு விவகாரங்கள் மற்றும் பல்கலைக்கழக விவகாரங்களுக்கிடையிலான தொடர்புகள்.

விண்ணப்பதாரிகள் ஒன்பது (09) வினாக்களில் ஐந்து (05) வினாக்களுக்குப் பதில் அளித்தல் வேண்டும்.

<u>பாட விதானம்:</u> பல்கலைக்கழகச் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், எழுத்து மூல சட்டங்கள் மற்றும் கட்டளைகள் ; நிர்வாகம், தாபனம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் சம்பந்தமான சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் ; அலுவலகக் கடிதங்கள் மற்றும் ஆணைக் குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் கட்டுப்பாட்டுச் சபைகளுக்கு சமர்ப்பிப்பதற்கான நிருபங்களை வரைதல் ; சூசிகைகளை தயார் செய்தல் ; அலுவலக முறைமை; கோவைப்படுத்தல் ; நடப்பு விவகாரங்கள் மற்றும் பல்கலைக்கழக விவகாரங்களுக்கிடையிலான தொடர்புகள் என்பன.

**II ஆவது வினாத்தாள்:**

<u>கணக்குகள், நிதி மற்றும் களஞ்சியசாலை நடைமுறைகள், எண் கணிதம், வர்த்தக எண் கணிதம், கணிதம் மற்றும் கணனி பற்றிய அறிவு.</u>

விண்ணப்பதாரிகள் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் "A" , " B" மற்றும் "C" பகுதிகளில் "A" பகுதியிலிருந்து குறைந்தது இரண்டு (02) வினாக்களுக்கும் " B" மற்றும் "C" பகுதிகளில் இருந்து குறைந்தது ஒரு (01) வினாவுக்கும் என மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு பதில் அளித்தல் வேண்டும்.

"A" பகுதி – { நான்கு (04) வினாக்கள் }

<u>பாட விதானம்:</u> எண் கணிதம், வர்த்தக எண் கணிதம்,

"B" பகுதி – { மூன்று (03) வினாக்கள் }

<u>பாட விதானம்:</u> கணக்குகள், நிதி மற்றும் களஞ்சியசாலை நடைமுறைகள்

"C" பகுதி – { மூன்று (03) வினாக்கள் }

<u>பாட விதானம்:</u> இணையத்தளம், மின்னஞ்சல், அடிப்படை கணனிப் பாதுகாப்பு, சொல் தொகுப்பாக்கம் (Word processing) விரி தாள்கள் (Spreadsheets) உட்பட கணனி பற்றிய அறிவு

**5.** ஒவ்வொரு வினாத்தாள்களுக்குமான நேரம் மூன்று (03) மணித்தியாலங்களாகும். ஒரு வினாத்தாளுக்கு 40% அல்லது அதற்கு அதிமான புள்ளிகளைப்பெறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

**6.** எழுத்து மூலப் பரீட்சைக்கு ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31 ஆம் திகதியன்று தகுதிபெறும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வருடாந்தம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

**7.** 2003.01.01 ஆம் திகதிய 816 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கைக்கமைய நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரியொருவரின் II ஆம் தரத்திற்கான பதவி உயர்வு அமுல்படுத்தப்படும் திகதியாக குறிப்பிட்ட ஊழியர் II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கு தகைமை பெற்ற திகதியே கருத்திற்கொள்ளப்படும். அதாவது, அவர் III ஆம் தரத்தில் ஆறு (06) வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த திகதியாகும்.

எவ்வாறாயினும், தகுதி பெற்ற எவரேனுமொரு ஊழியர் பதவி உயர்வு பெறுவதற்கு தகைமை பெற்ற ஆண்டில் விண்ணப்பிக்காதிருந்தால் அல்லது அந்த ஆண்டிற்காக நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையாதிருந்தால், அவர் அடுத்த சந்தர்ப்பத்தில் நடாத்தப்படும்

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் பட்சத்தில் அவரது II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெறும் திகதியை அவர் தகைமை பெறும் திகதிக்கு பின்தேதியிடக் கூடாது. அவ்வாறான ஊழியர் ஒருவர் விடயத்தில், அவர் எந்த ஆண்டிற்காக நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தாரோ அந்த ஆண்டின் குறிப்பிட்ட திகதியே அவரது பதவி உயர்வு அமுல்படுத்தப்படும் திகதியாக பின்தேதியிடப்படல் வேண்டும். இது சம்பந்தமான உதாரணம் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**8.** 1982.07.02 ஆம் திகதிய 185 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை மற்றும் 1994.01.26 ஆம் திகதிய 01/1994 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

**9.** தயவு செய்து, மேற்குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இதனை அனைத்து ஆளணிகளினதும் கவனத்தை ஈர்க்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வேண்டிக்கொள்கின்றேன்.

ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள/ சிரேஷ்ட உதவி நூலகர்கள் / உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/199